


அது ஒன்றும் கையடக்கத் திருக்குறள் சைஸில் தயாரிக்கப்பட்ட வஸ்து அல்ல. அறுநூறு கிலோ யூரியாவை மூட்டை மூட்டையாக அடைத்தாலே, எப்படியும் ஐந்தாறு மூட்டைகள் ஆகிவிடும். ஒரு பெரிய கண்டெய்னரில் அதைத் திணித்து, மேலுக்கு சாமக்கிரியைகள் எல்லாம் செய்து சேர்த்துப் பார்த்தால், ஒரு குட்டி ராட்சஸன் மாதிரி இருந்தது.

வேறு வழியே இல்லை. எப்படியும் ஒரு ஜீப் அல்லது லாரி இல்லாமல் எங்கும் எடுத்துப் போகமுடியாது. ஆனால், அதென்ன குடியரசு தின அணிவகுப்பு லாரி மாதிரி, ரைட் ராயலாகவா போகமுடியும்? வேறென்ன செய்யலாம்?

எல்லாப் புறங்களும் மூடிய ஒரு நல்ல, நீளமான, பெரிய வேன் தான் சரி என்று தீர்மானித்தார்கள்.

ஆனால், ஒரு வேனை விலைக்கு வாங்கும் உத்தேசமெல்லாம், அப்போது ரம்ஸி யூசூஃபுக்கு இல்லை. என்னதான் அல் காயிதா பின்னணியில் இருந்தாலும், அவனளவில் தன்னை ஒரு சுய வேலைவாய்ப்புத் தீவிரவாதியாகத்தான் அவன் கருதிக்கொண்டிருந்தான். ஆக, ஏழைக்கேற்ற எள்ளுருண்டையாக வாடகைக்கு ஒரு வேனை எடுக்கலாம் என்று தீர்மானித்தான்.

காமெடி அங்கேதான் ஆரம்பித்தது.

வேன் வாடகைக்கு எடுக்கிற பொறுப்பை, முகம்மது சலாமி என்கிற தன் நண்பன் ஒருவனிடம் அளித்திருந்தான் ரம்ஸி யூசூஃப். தான் வாடகைக்கு எடுக்கப்போகிற வேன் என்ன ஆகப்போகிறது, அதன் விளைவு என்னவாக இருக்கலாம் என்பதையெல்லாம், மிக நன்றாக அறிந்தவன் தான் அவன். ஆகவே, தன்னிடம் அளிக்கப்பட்ட பொறுப்பை அதிகபட்சக் கலை நேர்த்தியுடன் செய்து முடிக்க முடிவு செய்து, ஒரு காரியம் செய்தான்.

குண்டு வைப்பதற்காகத் தேர்ந்தெடுத்த தினத்துக்குச் (பிப்ரவரி 26, 1993) சரியாக இரண்டு நாள் முன்னதாக, ஒரு வாடகை கார் நிறுவனத்துக்குப் போய் தகுந்த வேன் ஒன்றைப் பார்த்து, கொஞ்சம் அட்வான்ஸும் கொடுத்து, ஓட்டிக்கொண்டு வந்துவிட்டான். வேனை அனைவரும் பார்த்தார்கள். அனைவருக்கும் திருப்தி. சமர்த்தாக ஆளுக்கு ஒரு பக்கம் கைகொடுத்துத் தூக்கி, அன்றிரவே குண்டை அந்த வேனில் ஏற்றியும் விட்டார்கள்.

இன்னும் நாற்பத்தெட்டு மணிநேரத்தைக் கடத்தியாக வேண்டுமே? வேனை பத்திரமாக ஓரிடத்தில் நிறுத்தி, மேலே ஒரு தாற்காலிக ஷெட் கட்டி, காவலுக்கும் ஆள் போட்டுவிட்டார்கள்.

அத்தோடு விட்டானா முகம்மது சலாமி என்றால், அதுதான் இல்லை!

மறுநாள் காலையே கர்மசிரத்தையாக, அந்த வாடகை கார் நிறுவனத்துக்கு போன் செய்து, தான் வாடகைக்கு எடுத்த வேன் களவாடப்பட்டுவிட்டது என்று ஒரு புகார் செய்தான்.

அதனால் என்ன, இழுத்து வைத்து நாலு சாத்து சாத்தியிருக்க வேண்டியதுதானே என்று தோன்றுமானால், கொஞ்சம் பொறுங்கள். அமெரிக்க சட்டதிட்டங்கள் அப்படி. பொதுமக்கள், குடிமக்கள், வந்தேறிகள், வந்து ஏறக் காத்துக்கொண்டிருப்பவர்கள் யாரும் எவ்விதமான மன உளைச்சலுக்கும் ஆளாகக் கூடாது என்று நினைத்து, ஏகப்பட்ட நுணுக்கமான விஷயங்களை யோசித்து யோசித்துச் சில கன்ஸ்யூமர் சட்டங்களை அமெரிக்கா வகுத்திருக்கிறது.

வாடகைக்கு என்று ஒருத்தன் ஒரு வேனை எடுக்கிறான். மனைவியுடனோ, மற்றவர்களுடனோ எங்கோ உல்லாசப் பயணம் போக முடிவு செய்து, வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தியிருப்பான். எவனோ களவாணிப்பயல் எடுத்துப் போய்விட்டான் என்றால் பாவம், அதற்கு அவன் என்ன செய்யமுடியும்? கண்டுபிடிக்க வேண்டியது காவல்துறையின் பொறுப்பு. வாடகை கார் நிறுவனம் இன்ஷ்யூர் செய்திருக்கிறதல்லவா? ஒருவேளை வண்டி கிடைக்காது போனால், இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் ஒழுங்கு மரியாதையாகப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடும். மரியாதைக்குரிய கஸ்டமரை இதன்பொருட்டு சிரமப்படுத்தக்கூடாது!

இதை நன்றாகப் புரிந்துகொண்டிருந்த முகம்மது சலாமி, வேன் தொலைந்துபோய்விட்டதாகப் புகார் செய்ததுடன், இன்னொரு காரியத்தையும் செய்தான். "உங்களிடம் வேனை வாடகைக்கு எடுத்து வந்தேனே தவிர, நான் அதை உபயோகப்படுத்தவே இல்லை. அதனால் நான் முன்பணமாகக் கொடுத்த நானூறு டாலரை நீங்கள் எனக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்" என்று கேட்டான்.

கடை முதலாளி ஏதோ சொல்லிச் சமாளித்து, அப்போதைக்கு அந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். சலாமி சும்மா இருக்கவில்லை. அன்றைய தினமே மேலும் இரண்டு முறை அந்த முதலாளிக்குப் போன் செய்து, தான் கொடுத்த அட்வான்ஸைத் திரும்பக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்த ஆரம்பித்தான்.

இதெல்லாம் எதற்கு? வேன் தொலைந்துவிட்டதாக முதலாளியை முதலில் நம்பவைத்துவிட்டால், பின்னால் ஒரு வழக்கு, விசாரணை என்று வந்தாலும் தாம் சம்பந்தப்படாமல் தப்பித்துக்கொள்வதற்காக! செய்யும் தவறை நேர்த்தியாகச் செய்வதற்காக அவன் தேர்ந்தெடுத்த உத்திதான், கொடுத்த பணத்தைத் திரும்பக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்தியது.

இந்த விவகாரத்தை இப்போதைக்கு இங்கே நிறுத்திக்கொள்வோம். பின்னால் தொடர்ந்தால் போதும். அந்த நாளும் வந்தது. அது அமெரிக்கா நொந்த நாள். அன்றைக்குப் பிற்பகல் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு ரம்ஸி யூசுஃப் கோஷ்டி, அந்த வேனை ஓட்டிக்கொண்டு உலக வர்த்தக மையக் கட்டட வளாகத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். வெளியேயே சிலர் வண்டியிலிருந்து இறங்கிக்கொண்டார்கள். யூசுஃப் மட்டும் வாகனத்தை ஓட்டிக்கொண்டு, கார் பார்க்கிங் இடத்துக்குப் போனான். அத்தனாம்பெரிய மாடமாளிகையின் தரைத்தளத்துக்கும் கீழே, ஒரு தளம் கட்டி அங்கேதான் வண்டிகளை விட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஓட்டிச் சென்ற வேனை யூசுஃப் அங்கே நிறுத்திவிட்டு, குண்டு பரமாத்மா அப்துல் ரஹ்மான் யாசின் சொன்னபடி, வெளியே நீட்டிக்கொண்டிருந்த ஃப்யூஸை சிகரெட் லைட்டரால் பற்றவைத்தான். ஹாயாக இறங்கி வெளியேறி, நண்பர்களுக்கு வெற்றிச் சின்னம் காட்டி அழைத்துக்கொண்டு பஸ்ஸோ, டாக்சியோ பிடித்துக் கரைந்து காணாமல் போனான்.

சரியாகப் பன்னிரண்டு நிமிடங்களில் அந்தத் தீ, ஃப்யூசின் இருபதடி நீளத்தை எரித்துக் கடந்து, ரசாயனக் கேந்திரத்தைச் சென்று அடையும். அதே வினாடி குண்டு வெடிக்கும்!

சரியாக 12.17 மணிக்கு அது வெடித்தது.

தீப்பிழம்பும் கரும்புகையும் உடனடி இடிபாடுகளும் அசகாய சப்தமுமாக அந்தப் பிராந்தியத்தில் என்ன நடந்தது என்பதே அடுத்த சில வினாடிகள் வரை புரியாமல் இருக்க, வெடித்த குண்டினால் எழுந்த புகை, வர்த்தக மையக் கட்டடங்களின் 93-வது மாடி வரை சூழ்ந்து எழுந்து நின்றது! உடனடியாக மின்சார சப்ளை நாசமானது

மிகவும் சக்தி வாய்ந்த குண்டு. ஆனால், அதிர்ஷ்டவசமாக யூசூஃப் அதைச் சரியான இடத்தில் நிறுத்தத் தவறிவிட்டதால், அவன் எதிர்பார்த்த முழு இடிபாடு - முழுச்சேதம் என்பது தவிர்க்கப்பட்டது. ஆறு பேர் பலியானார்கள். சரியாக ஆயிரம் பேர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஒட்டுமொத்த அமெரிக்காவின் கவனமும், அடுத்த சில மணிநேரங்கள் வர்த்தக மையக் கட்டடத்தைச் சுற்றியே இருக்க, ரம்ஸி யூசூஃப் தன் திட்டப்படி நண்பர்களிடம் சொல்லிக்கொண்டு, பல்வேறு அமெரிக்க நகரங்களைச் சுற்றி, ஒரு மாதிரி காவல் துறை குழப்பம் அடையும் விதத்தில், தனது பயணத்திட்டத்தை வகுத்துக்கொண்டு எங்கெங்கோ விமானம் ஏறி, எங்கெங்கோ இறங்கி, பல மணிநேரங்கள் கழித்து பாகிஸ்தானில் போய் இறங்கிவிட்டான்.

மறுபுறம், அமெரிக்க அதிபர் பில் க்ளிண்டன், அதிர்ச்சியில் சில மணிநேரங்கள் உறைந்தது போதும் என்று முடிவு செய்தவராக, அமெரிக்காவின் அத்தனை புலனாய்வு ஏஜென்சிகளும் ஒருங்கிணைந்து வேலை செய்து, இந்த விஷயத்தில் எத்தனை சீக்கிரம் முடியுமோ, அத்தனை சீக்கிரம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதுதான். அங்கேதான் அமெரிக்கா தான் யாரென்று உலகுக்குக் காட்டியது. பொதுவாக அமெரிக்க உளவுத் துறைகளான சி.ஐ.ஏ.வுக்கும் எஃப்.பி.ஐ.க்குமே ஏழாம்பொருத்தம். சுலபத்தில் எந்த விஷயத்திலும் ஒத்துப்போகவே மாட்டார்கள். நீ பெரியவனா, நான் பெரியவனா என்பதில் எப்போதும் குடுமிப்பிடிச் சண்டை இருக்கும். இந்த இரு புலனாய்வு அமைப்புகளும் இப்படி என்றால், லோக்கல் போலீஸ் இன்னும் ஒரு படி மேலே. 'நீங்கள் இரண்டு பேருமே வெத்து, நாந்தான் பெரியவன்' என்று எப்போதும் சொல்லும் குணம் அதற்கு உண்டு. இதற்கெல்லாம் மேலே, தேசிய பாதுகாப்பு கவுன்சில் என்று ஓர் அமைப்பு உண்டு. கிட்டத்தட்ட சர்வாதிகாரி மாதிரி அது. எல்லாவற்றுக்கும் மேலே நீதித்துறை. அத்தனை பேரும் சரணடைந்தே ஆகவேண்டிய இடம்.

க்ளிண்டனின் உத்தரவு என்னவென்றால், சம்பந்தப்பட்ட இந்த வழக்கில், இன்னார் அன்னார் என்கிற பாகுபாடே இல்லாமல், அத்தனை பேரும் ஒருங்கிணைந்து வேலை செய்தாகவேண்டும். ஒரு எமர்ஜென்சி கால கட்டத்துச் செயல்பாடு போலப் புலனாய்வு இருக்க வேண்டும். உலகம் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள்ளாக நாம் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துவிட வேண்டும்.

கண்டிப்பான உத்தரவு. மீறவே முடியாது. தவிரவும், புலனாய்வின் ஒவ்வொரு அங்குல முன்னேற்றமும் உடனுக்குடன் அதிபருக்குத் தெரிந்தாகவேண்டும் என்றொரு பின்குறிப்பும் இருந்தபடியால், அத்தனை ஏஜென்சிகளும் தங்கள் ஈகோவைத் தூக்கி கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டு, வரிந்துகட்டிக்கொண்டு களத்திலிறங்கின.

ஒருபுறம், சி.ஐ.ஏ. தன் சர்வதேசத் தொடர்புகளை முடுக்கிவிட்டு, தாக்குதலின் வேர்களைத் தேடத் தொடங்கியது. இன்னொருபுறம், எஃப்.பி.ஐ. அமைப்பின் நியூயார்க் பிரிவு அலுவலகம் உள்நாட்டில் புலனாய்வைத் துரித கதியில் மேற்கொண்டது. காவல்துறையோ, தேசத்தின் இண்டு இடுக்கைக்கூட விடாமல், ஒவ்வொரு இடத்திலும் சந்தேகப்படத்தக்க நபர்கள் யார் இருந்தாலும் அள்ளிக்கொண்டு வந்து பூஜை போடத் தொடங்கியது.

இப்படி தேசமே இணைந்து தேடிக்கொண்டிருக்கிற விஷயம் எது குறித்தும் கவலைப்படாமல், அண்ணன் முகம்மது சலாமி, குண்டு வெடிப்புக்கு மறுநாளும் அந்த வாடகை வேன் கம்பெனி முதலாளிக்கு போன் செய்து, 'என் நானூறு டாலர் என்ன ஆச்சு?' என்று கேட்டான்.

வெறுத்துப்போன முதலாளி, 'யோவ், என் வேனே போச்சு. உன் நானூறு டாலரா பெரிசு?' என்று கொஞ்சம் கோபமாகப் பேச, சலாமி விடாமல், 'அதெல்லாம் முடியாது. மரியாதையா என் பணத்த எண்ணி வெக்கலன்னா நடக்கறதே வேற' என்று உதார் விடத் தொடங்கினான்.

அதே சமயத்தில், அங்கே குண்டு வெடித்த இடத்தில் ஆராய்ச்சி மேற்கொண்ட தடயவியல் மற்றும் காவல் துறை அதிகாரிகள், வெடித்த வேனின் பகுதிகளை எடுத்து நோண்டிப் பார்க்க, எகிறி எங்கோ விழுந்துகிடந்த நம்பர் ப்ளேட்டை ஒருவழியாகப் பிடித்தார்கள். அதைக் குளிப்பாட்டி, சாம்பிராணி, பவுடர் எல்லாம் போட்டுப் பார்த்ததில் வேனின் நம்பர் தெரிந்தது.

இது போதாது? விசாரித்தபோது சம்பந்தப்பட்ட வாடகை கார் முதலாளி புலம்ப ஆரம்பித்தார்.

"அட ஆமா சார். எவனோ ஒரு கேப்மாரி வாடகைக்கு எடுத்துட்டுப் போயி, தாரவாத்துட்டான். சொம்மா பணத்த குடு, பணத்த குடுன்னு தொந்தரவு பண்ணிக்கிட்டிருக்கான். அவன் மட்டும் என் கையில கிடைச்சா கைமா போட்டுருவேன்" என்று ஒப்பாரி வைக்க, காவல் அதிகாரிகள் விழித்துக்கொண்டார்கள்.

"அப்படியா? அவனை வரச்சொல்லுங்களேன்? அவன் பணத்தைக் கொடுத்தால் போகிறது!"

முதலாளி புரியாமல் விழிக்க, காவல் அதிகாரி விளக்கிச் சொன்னார். அடுத்தமுறை பணம் கேட்டு சலாமி போன் செய்தபோது, 'சரி, வந்து தொலை. தருகிறேன்' என்றார் அந்த முதலாளி.

சலாமி மீன், வலையை நோக்கி வரத்தொடங்கியது.